# சிதம்பரம் நகராட்சி



## 2020 ம் ஆண்டு மார்கழி திங்கள் 16–ம் நாள் 31.12.2020 வியாழன் கிழமை காலை 10.30 மணியளவில் நடைபெறும் சாதாரண நகர்மன்ற கூட்டம் நடைபெறும்

## மன்றக்கூட்டப் பொருள்

**1)** சிதம்பரம் நகராட்சி பகுதியில் உள்ள 33 வார்டுகளில் டெங்கு கொசு ஒழிப்பு பணி செய்யும் பணிக்கு ஒப்பந்த அடிப்படையில் பணி செய்யப்பட்டு வருகின்றது. அக்காலம் 18.12.2020உடன் முடிவடைவதால், சித்தி விநாயகர் & கோ நிறுவனத்தாரின் கடிதத்தில், டெங்கு கொசு ஒழிப்பு பணிக்கான ஒப்பந்த காலம், கால நீடிப்பு செய்து உத்தரவு வழங்க கோரியுள்ளார். துணை இயக்குநர், சுகாதாரப் பணிகள், கடலூர் அவர்களின் கடிதத்தில் தற்காலிக கொசு ஒழிப்பு பணியாளர்களின் பணிக்காலத்தினை தற்போது டெங்கு நோய் மற்றும் கொரோனா போன்ற தொற்று நோயின் தாக்கம் அதிகமாக இருப்பதால், மேற்கண்ட நோய்களை கட்டுப்படுத்தும் பொருட்டு ஜனவரி 2021 முதல் மார்ச் 2021 வரை மூன்று மாதம் காலம் பணி நீட்டிப்பு உத்தரவு வழங்குமாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேற்படி பணிக்காலத்தினை நீட்டிப்பு செய்தும், ஏற்கனவே வழங்கப்பட்ட அதே தினக்கூலி அடிப்படையில் அதே ஒப்பந்ததாரருக்கு வழங்க மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு :**
மன்றம் அனுமதிக்கலாம்

**ந.க.எண். 2481/2020/H1**

**2)** இந்நகராட்சி பொது சுகாதாரப்பிரிவில் இயங்கி வரும் TN/91B-5126 எண்ணுள்ள வண்டிக்கு தகுதி சான்று 07.01.2021ல் முடிவடைவதால் மேற்படி வாகனத்திற்கு, வாகனம் முழுவதும் பழுது நீக்கம் செய்து தகுதி சான்று பெறுவதற்கு உத்தேசம் செலவினம் ரூ.1,25,000/–க்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு :** அவசர அவசியம் கருதியும், தனி அலுவலர் அவர்களின் முன் அனுமதி பெற்று, பழுது நீக்கம் செய்து தகுதி சான்று பெற மன்றம் அனுமதிக்கலாம்

**ந.க.எண்.4933/2020/ எச்1**

**3)** இந்நகராட்சி பொறியியல் பிரிவு மற்றும் சத்துணவு பிரிவில் பணிபுரியும் பணியாளர்கள் திருமதி.R.ஞானசுந்தரி, உதவியாளர் மற்றும் திரு.C.இளவரசன், மின்கம்பி உதவியாளர் ஆகியோர் **31.12.2020** அன்று வயது முதிர்வின் காரணமாக பணி ஓய்வு பெறுவதால் அண்ணார்களுக்கு சேர வேண்டிய சிறப்பு சேமநலநிதி சந்தா தொகை மற்றும் அதற்குரிய வட்டி மற்றும் அரசு மாண்யம் ரூ.**10000/–** வழங்குவதற்கும், அதற்கான செலவினத்திற்கும் மன்றத்தின் அனுமதி கோரப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு :** மன்றம் அனுமதிக்கலாம்

**ந.க.எண். 3243/2020/பி3**

**4)** சிதம்பரம் நகராட்சி பகுதிகளில் புரவி புயல் மற்றும் மழை வெள்ளம் காரணமாக பரவும் தொற்று நோய் தடுப்பு பணிக்காக **33** வார்டுகளிலும் பிளிசிங் பவுடர் பயன்படுவதற்கு **11.12.2020** அன்று விலைப்புள்ளி கோரியதில் பிளிசிங் பவுடர் விநியோகஸ்தர்கள் இடம் இருந்து **14.12.2020** அன்று கீழ்க்கண்டுள்ள விவரப்படி இரண்டு விலைப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளது.

1) நந்தினி பிளிசிங் பவுடர் சப்ளையர்
   காரியாசேரி, திருக்கழுகுன்றம் – **603 109** – 1Kg ரூ.59/–

2) தர்ஷினி ஏஜென்சி
   **256**, பாலாஜி நகர், விருத்தாசலம் – **606 001.** – 1Kg ரூ.54/–

குறைந்த விலைப்புள்ளி கொடுத்த தர்ஷினி ஏஜென்சி விருத்தாசலம் என்ற நிறுவனத்திற்கு நகராட்சி ஆணையரின் முன் அனுமதி பெற்று விநியோக உத்தரவு வழங்கியதற்கும் அதற்கான செலவின தொகைக்கும் மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு :**

1) மன்றம் அனுமதிக்கலாம்
2) அவசர அவசியம் கருதி ஆணையர் அவர்களின் முன் அனுமதி பெற்று விநியோக உத்தரவு வழங்கியதையும் மன்றம் அனுமதிக்கலாம்.

**ந.க.எண். 948/2020/எச்1**

**5)** **மாவட்ட ஆட்சித் தலைவர்/பெருந்தலைவர், மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை, கடலூர் அவர்களின் செயல்முறைகள் ந.க.எண். அ3/2466/2020, நாள் : 02.11.2020–ல் ஒருங்கிணைந்த குழந்தைகள் வளர்ச்சி திட்டம் 2019–20–ன்** கீழ் அங்கன்வாடி மையம் பழுது நீக்கம் செய்யும் பணிக்கான ரூ. 2.00 இலட்சம் மதிப்பீட்டில் திரௌபதி அம்மன் கோவில் தெரு அங்கன்வாடி மையத்தினை பழுது நீக்கம் செய்ய நிர்வாக அனுமதி வழங்கப்பட்டது. இதனடிப்படையில் பணியினை மேற்கொள்ள **04.12.2020** அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில், வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளின் மீது கீழ்கண்ட விபரப்படி ஒப்புநோக்கு பட்டியல் தயார் செய்ததில்

| வ. எண். | பணியின் விபரம் | ஒப்பந்ததாரர்கள் பெயர் விபரம் | மதிப்பீட்டு தொகை ரூ. | ஒப்பந்த சதவீதம் குறைவு | ஒப்பந்த சதவீதம் அதிகம் |
|---|---|---|---|---|---|

| 1 | 2 | 3 | 4 | 5 | 6 |
|---|---|---|---|---|---|
| | ஒருங்கிணைந்த குழந்தைகள் வளர்ச்சி திட்டம் 2019–20 | | | | |
| 1 | வார்டு எண்.14, திரௌபதி அம்மன் கோவில் தெரு அங்கன்வாடி மையத்தினை பழுது நீக்கம் செய்யும் பணி. | **திருமதி.கே.முத்துலட்சுமி** ஒப்பந்ததரார், பணங்காடு. | 2,00,000/– | மதிப்பீட்டினை விட 0.09 % குறைவு | –– |
| | | **திரு.எஸ்.கிருஷ்ண மூர்த்தி** ஒப்பந்ததாரர், நாஞ்சலூர். | | –– | மதிப்பீட்டினை விட 2.42 % அதிகம் |

வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளில் கலம் எண்.5–ல் கண்டுள்ளபடி மதிப்பீட்டினைவிட **0.09% குறைவாக** கொடுத்துள்ள **திருமதி.கே.முத்துலட்சுமி,** என்ற ஒப்பந்ததாரரின் ஒப்பந்தபுள்ளியினை ஏற்கலாம்.

**அலுவலகக் குறிப்பு :** மன்றம் அனுமதிக்கலாம்

**ந.க.எண். 4683/2020/இ1**

**6)** இந்நகராட்சிக்கு எல்லைக்குட்பட்ட இடங்களில் முடிதிருத்தகம் / அழகுநிலையம் / ஸ்பா/ மசாஜ்நிலையம் நடத்துவோர், நகராட்சியில் உரிமம் கட்டணத்தினை (2018–ம் ஆண்டு தமிழ்நாடு நகராட்சி சட்டங்கள் (5வது திருத்தம்) சட்டத்தினால் (தமிழ்நாடு சட்டம் 40/2018) திருத்தம் செய்யப்பட்ட அட்டவணை V-ல் உள்ள உட்பிரிவு (ii) மற்றும் (iii)-ல் தெரிவிக்கப்பட்டுள்ள நோக்கங்களுக்காக, 1920ம் ஆண்டு தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் சட்டம் (தமிழ்நாடு சட்டம் V/1920) பிரிவு 249–ன்படி, உரிய விண்ணப்பம் பெற்று, தவறாமல் புதுப்பித்திட வேண்டி, மேற்படி சிதம்பரம் நகராட்சியில் அழகு நிலையங்களுக்கு உரிமக்கட்டணம் வசூலித்திட அரசிதழில் பிரசுரம் செய்வதற்கும் நாளிதழில் பிரசுரம் செய்ததற்கு செலவினத்தினை வழங்கிடவும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு :** அவசர அவசியம் கருதி அழகு நிலையங்கள் மற்றும் மசாஜ் நிலையங்களுக்கு உரிமக் கட்டணத்தினை வசூலித்திட அரசிதழில் பிரசுரம் செய்திட மன்றம் அனுமதிக்கலாம்

**ந.க.எண். 4979/2020/எச்1**

**7)** வடகிழக்கு பருவமழை – நிவர் புயல் – 2020 சிதம்பரம் நகரில் அதிக மழையின் காரணமாக பாதிக்கப்பட்ட இடங்களில் தற்காலிக பராமரிப்பு பணிகளை மேற்கொள்ள நகராட்சி நிர்வாக ஆணையர் அவர்களின் செயல்முறை ந.க.எண். 21976/2020/இ2, நாள் : 10.12.2020 தேதியில் ரூ.30.00 நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டது. இதில் கீழ்கண்ட பணிகளை மேற்கொள்ள மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

| வ. எண் | பணியின் பெயர் | மதிப்பீட்டு தொகை (ரூ.லட்சத்தில்) |
|---|---|---|
| 1 | சிவகாமி அம்மன் கோவில் தெரு, வீரராகவன் தெரு, காயத்திரி அம்மன் கோவில் தெரு மற்றும் கன்னிபொன்னுசாமி தெருக்களில் சேதமடைந்த தார் | 10.00 |

| | | |
|---|---|---|
| | சாலைகளை சீரமைக்கும் பணி . | |
| 2 | ஞாயிற்று கிழமை மடதெருவில் சேதமடைந்த சிறுபாலத்திற்கு பதில் புதிய சிறுபாலம் கட்டும் பணி. | 2.50 |
| 3 | தெற்குவாணியத் தெரு, கனகசபை நகர் 2–வது குறுக்கு மெயின் ரோடு சந்திப்பு மற்றும் சபாநாயகர் தெரு சந்திப்பில் உள்ள சேதமடைந்துள்ள சிறுபாலங்களுக்கு பதில் புதிய சிறுபாலங்கள் கட்டும் பணி. | 4.30 |
| 4 | நகராட்சி பேருந்து நிலையத்தில் உள்ள இலவச கழிவறையில் சேதமடைந்த ஆழ்துளை கிணற்றிற்கு பதில் புதியதாக ஆழ்துளை கிணறு அமைத்து தண்ணீர் வசதி ஏற்படுத்தும் பணி | 2.15 |
| 5 | கனகசபை நகர் மேல்நிலை நீர்தேக்க தொட்டியில் உள்ள பழுதடைந்த ஆழ்துளை கிணறு மோட்டர், மோட்டர் பைப், ஸ்டாட்டர் ஆகியவற்றிற்கு பதில் புதிய மோட்டார், பைப் பொருத்துதல் மற்றும் சிறப்பு பழுதுபார்ப்பு பணிகள் மேற்கொள்ளுதல். | 3.70 |
| 6 | நகராட்சிக்குட்பட்ட மீன்மார்கெட்டில் உள்ள மேல்நிலை நீர்த்தேக்க தொட்டிக்கு செல்லும் சேதமடைந்த குழாயினை மாற்றியமைக்கும் பணி. | 0.55 |
| 7 | செங்கட்டான் தெருவில் சேதமடைந்த குடிநீர் பகிர்மான குழாயினை புதியதாக மாற்றியமைக்கும் பணி. | 1.25 |
| 8 | சிதம்பரம் நகரில் நிவர் புயலின்போது சேதமடைந்த தெருவிளக்குகள் மற்றும் டைமர் சுவட்ச் ஆகியவற்றை புதியதாக மாற்றியமைக்கும் பணி. | 3.60 |
| 9 | நிவர் புயல் காரணமாக வெள்ள நிவாரண மையங்களுக்கு வாடகை அடிப்படையில் ஜெனரேட்டர், மின் விளக்குகள் மற்றும் வெள்ள நீரை வெளியேற்ற வாடகை அடிப்படையில் ஜெ.சி.பி இயந்திரங்கள் அமர்த்துதல் பணி. | 1.95 |
| | **கூடுதல்** | **30.00** |

**அலுவலகக் குறிப்பு :** 1) மன்றம் அனுமதிக்கலாம்.
2) மன்ற அனுமதியினை எதிர்நோக்கி தனி அலுவலரின் முன் அனுமதி பெற்று ஒப்பந்தபுள்ளி கோரியதை மன்றம் அங்கீகரிக்கலாம்.
3) வரிசை எண். 9–ல் உள்ள பணி நிவர் புயலின்போது நகராட்சி சட்டம் 1920,பிரிவு–15–ன்கீழ் மேற்கொள்ளப்பட்டு தொடர் நடவடிக்கை மேற்கொண்டதையும் மன்றம் அங்கீகரிக்கலாம்.

**8)** இந்நகராட்சி பொது சுகாரப்பிரிவில் கொரோனா நோய் தடுப்பு பணிக்காகவும் மற்றும் புரேவி புயல் காரணமாக நகராட்சியில் பணிபுரியும் உட்புற மற்றும் வெளிப்புற பணியாளர்களின் பாதுகாப்பு கருதி மாஸ்க், கையுறை, மழைகோட் மற்றும் அனைத்து வார்டுகளின் தூய்மை பணிக்கு தேவைப்படும் சுண்ணாம்பு நீர் போன்ற பொருள்கள் சித்தி விநாயகா அண்டு கோ நிறுவனத்தின் மூலம் பெறுவதற்கும், அதற்கு உண்டான செலவின தொகை ரூ.6,50,000/–க்கு மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு :** அவசர அவசியம் கருதி மன்றம் அனுமதிக்கலாம்.

**ந.க.எண்.4078/எச்1 / 2020**

**9)** சிதம்பரம் நகராட்சியை எதிர்த்து திருமதி.மீனாட்சி என்பவர் சென்னை உயர்நீதி மன்றத்தில் SA.No.1113/2009 என்ற மேல்முறையீட்டு வழக்கு நடைபெற்று வருகிறது.

வழக்கினை நகராட்சி சார்பாக ஆஜராகி வழக்கை நடத்தி வரும் சென்னை உயர்நீதிமன்ற வழக்கறிஞர் திருமதி.ஆர்.ரேவதி அவர்கள் வழக்காடு கட்டணமாக ரூ.22,500/– வழங்க கோரியுள்ளார். இவ்வழக்குகாக ஏற்கனவே 07.01.2011ல் ரூ.7,500/– வழங்கப்பட்டுள்ளது போக மீதமுள்ள ரூ.15,000/– வழக்காடு கட்டணத்தை நகராட்சியின் பொது நிதி 2020–21 கீழ் வழங்க மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு :**

1) மன்றம் அனுமதிக்கலாம்.
2) வழக்குக்காக வழக்காடு கட்டணம் வழங்கிட மன்றம் அங்கீகரிக்கலாம்.

**ந.க.எண்.6036 / 2006 / எப் 1**

**இடம்: சிதம்பரம்**
**நாள்: 31.12.2020**

**தனி அலுவலர்,**
**சிதம்பரம் நகராட்சி**